**செய்தி வெளியீடு எண்: 392** **நாள்: 03.07.2019**

# செய்தி வெளியீடு

உச்சநீதிமன்றத்தின் **11.12.2018** நாளிட்ட வழக்கு எண் W.P.(Civil) No.565/2012ல் போக்சோ சட்டத்தில் (POCSO Act) பாதிக்கப்படும் நபர்களின் அடையாளத்தையோ மற்றும் பெயரையோ வெளிப்படுத்த கூடாது என கீழ்காணும் ஆணைகளை பிறப்பித்துள்ளது.

1. போக்சோ சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட நபர்களின் பெயர் மற்றும் அவர்களின் இதர விவரங்களை எந்த ஒரு நபரும் அச்சு, மின்னணுவியல் மற்றும் சமூக ஊடகங்கள் முதலியவற்றில் தெரியப்படுத்தவும் மற்றும் பாதிக்கப்பட்டவருடைய அடையாளத்தை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தவும் கூடாது.
2. இந்த நீதிமன்ற அமர்வு பாதிக்கப்பட்டவர் இறந்துவிட்டால் பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தையோ மற்றும் பெயரையோ அவர்கள் உறவினர்கள் அங்கீகரித்தால் கூட பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தையோ மற்றும் பெயரையோ வெளியிடக்கூடாது.
3. முதல் தகவல் அறிக்கையில் இந்திய **தண்டனைச்** சட்டம் பிரிவு 376, 376A, 376AB, 376B, 376C, 376D, 376DA, 376DB **அல்லது** 376E குற்றச்சாட்டுகள் மறறும் போக்சோ சட்டத்தின் கீழ் குற்றங்கள் தொடர்பான விவரங்களை பொது இடங்களில் வெளியிடக்கூடாது.
4. பாதிக்கப்பட்ட ஒரு வழக்கில் இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 372-ன் கீழ் ஒருவர் மேல்முறையீடு செய்**தால்** பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தையோ மற்றும் பெயரையோ வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.
5. காவல் அதிகாரிகள் பாதிக்கப்பட்டவர் சம்பந்**தப்**பட்ட அனைத்து ஆவணங்களையும் முடிந்தவரை முத்திரை செய்யப்பட்ட வில்லையில் மறைமுகமாக பாதுகாக்கப்பட வேண்டும். இந்த ஆவணங்களை பொது இடத்தில் ஆராய்ந்து பார்க்கக்கூடாது.
6. வழக்கு புலனாய்வு நிறுவனம் அல்லது நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்படும் பொது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாதிக்கப்பட்டவரின் அடையாளம் மற்றும் பெயரை இரகசியமாகவும் மேலும் வழக்கு சம்பந்தப்பட்ட அறிக்கையைத் தவிர வேறு எதையும் வெளியிடக்கூடாது.
7. பாதிக்கப்பட்டவர் இறந்துவிட்டால் அவரின் அடையாளத்தை வெளிப்படையாக ஒப்புதல் பெறுவதற்க்கு இந்திய **தண்**டனைச் சட்டம் பிரிவு 228A(2)(c) -ன் கீழ் தீங்கற்ற மனநிலையில் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அடுத்தவரின் விவரம் விண்ணப்பப்படிவம் 228A(1)-ன் கீழ் சமூக நல நிறுவனங்களின் வழிகாட்டுதலின் படியே வழங்கப்படவேண்டும்.
8. போக்சோ சட்டத்தின் கீழ் உள்ள சிறார்களின் அடையாளத்தை சிறப்பு நீதிமன்றத்தால் மட்டுமே வெளியிட அனுமதிக்கலாம். அத்தகைய வெளிப்படுத்துதல் குழந்தைகளின் நலனுக்காக மட்டுமே இருத்தல் வேண்டும்.

**(க. மணிவாசன்)**
அரசு முதன்மைச் செயலாளர்
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – **9**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**